450

மாதரம்! அல்லாஹு அக்பர்!!

மகாத்மா காந்திக்கு ஜே!!

தேசிய கீர்த்தனைகள்.



OFFICE OF THE

O. கிருஷ்ணமாசாரி,
திருவுள்ளூர்.

O-,1x
N25
180429

சென்னை லோகல் போர்ட்ஸ் மான்யூவல்.

(தமிழ்ப்பதிப்பு.)

இதில் அரிய பெரிய விஷயங்கள் அடங்கியுள்ளவென்பதை தங்களுக்குக் கூறவேண்டியதில்லை 1920-ம் ௵த்திய டிஸ்ட்ரிக்ட்டு, தாலூகா, யூனியன் போர்டுகள் ஆக்டும், அந்நாள் முதல் விதிகளிலும், இதர அம்சங்களிலும், ஏற்பட்டுள்ள மாறுதல்கள் பூராவும், இன்றைய தேதிவரையில் இந்த ஆக்டின் கீழ் ஏற்பட்டுள்ள வழக்குக் குறிப்புகள், கிராம பஞ்சாயத்து ஆக்டும், இன்னும் ஷை போர்டுகளுக்கு சம்பந்தப்பட்ட இதர ஆக்டுகளும் அடங்கியுள்ளது இம்மாதிரி வெளிவரும் பிரசுரம் இதுதான் முதல் தடவை. ஷை பதிப்பு ஒவ்வரிடமும் இருத்தல் அதிக அவசியம். இது நேர்த்தியான காலிகோ பைண்டு செய்யப்பட்டது. வேண்டுவோர் அடியில்கண்ட விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

புஸ்தகம் 1-க்கு தபால் சிலவு உள்பட கிரயம்

ரூ. 3—8—0.

C. A. சிவபூஷணம் அண்டு கோ.,

திருவள்ளூர், **M. S. M.**

894.8111
2939

ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்.

கவிகள்.

ராகம் கமாஸ்—தாளம்—ஆதி

1. என்று தணியு மிந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?
என்றெம தன்னை கை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?
அன்றொரு பாரதமாக்க வந்தோனே.!
ஆரியர் வாழ்வினை யாதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னருளன்றோ?
மெய்யடியோ மின்னும் வாடுதல் நன்றோ?

2. பஞ்சமு நோயுநின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்ச மடைந்த பின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப்போமோ?
அஞ்சலென் றருள் செயயுங் கடமை
யில்லாயோ?
ஆரிய நீதியின் அறமறந் தாயோ
வெஞ்செய லரக்கரை வீட்டிடுவோனே
வீரசிகாமணி, ஆரியர் கோனே.

வந்தே மாதரம்.

நாயுமர்னவர் ஆனந்தக் களிப்பு மெட்டு:
ராகம்—நாதநாமக் கிரியை. தாளம்—ஆதி.

பல்லவி.

வந்தே மாதர மென்போம்—எங்கள்
பாரிலத் தாயை வணங்குது மென்போம்.
(வந்தே)

சரணங்கள்.

1. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே.
(வந்தே)

2. ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ?—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ?
(வந்தே)

3. ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர்வந்து புகலென்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ
(வந்தே)

4. ஒன்று பட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(வந்தே)

5. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு யந்த நிலை பொதுவாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.
(வந்தே)

6. புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி.
(வந்தே)

வந்தே மாதரம்.

ராகம்—ஹிந்துஸ்தானி பியாக்—தாளம் ஆதி.

பல்லவி.

வந்தே—மாதரம்—ஜய.
வந்தே மாதரம். (வந்தே)

சரணங்கள்.

1. ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய ஜய ஜய. (வந்தே)

2. ஆரிய பூமியில்
நாரிய ரும் நர
சூரிய ரும் சொலும்
வீரிய வாசகம். (வந்தே)

3. நொந்தே போயினும்
வெந்தே மாயினும்
நந்தே சத்தர்—உ
வந்தே— சொல்வது. (வந்தே)

4. ஒன்றாய் நின்றினி
வென்றா யினியுயிர்
சென்றா யினும் வலி
குன்றா தோதுவம். (வந்தே)

ராட்டுப்பாட்டு.

நாமக்கல் ஸ்ரீமான் இராமலிங்கம் பிள்ளை
இயற்றியது.
(பாம்பாட்டிச் சித்தர்பாடல், ஆடுபாம்பே
என்றமெட்டு).

பல்லவி.

ஆடு ராட்டே—சுழன்றாடு ராட்டே.

அனுபல்லவி.

சுழன்று சுழன்று சுழன்றாடு ராட்டே—இனிச்
சுயராஜ்யம் வந்ததென்று. (ஆடு)

சரணங்கள்.

பாவங் குறையுமென்று ஆடு ராட்டே—இனிப்
பயங்கள் மறையுமென்று ஆடு ராட்டே
கோபங் குறையுமென்று ஆடு ராட்டே—நல்ல
குணங்கள் மிகுந்ததென்று ஆடு ராட்டே. (ஆடு)
மேலான ஜாதியென்று மிகப் பேசி மிக
மாறான காரியங்கள் செய்து வாழும்
மேலான ஜனங்களின் வஞ்சனை யெல்லாம்—இனி
மாண்டு மடியுமென்று. (ஆடு

ஏழைகள் கண்ணீர் சொரிய மிகவருந்தி—பல
எத்துக்கள் செய்தே பிழைக்கும் மனிதரெல்லாம்
வாழமுடியாதினிமேல் வஞ்சனையினால்—அவர்
வாழ்க்கை திருந்துமென்று. (ஆடு)

பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து—மிகப்
பாடுபடும் கிராமத்து பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நீழலிருந்து—நூல்
இழைத்துப் பிழைப்பரென்று. (ஆடு)

கள்ளுபீர் சாராயம் காம வகைகள்—கெட்ட
கஞ்சா அபின்களெல்லாம் ஓடி யொளிக்க
பிள்ளை குட்டி பெண்சாதி வயிறார—உண்ணப்
பெற்றது சுதந்திரமென்றாடு ராட்டே. (ஆடு)

உழுது நெய்து பலதொழில் செய்து—பொருள்
உதவும் வாணிபமும் முயல்வதெல்லாம்
தொழுது பணி புரியும் தொழில்களெல்லாம்—இனித்
தொலைந்த துலகிலென்று. (ஆடு)

வம்பளந்து வீண் பொழுது போக்கமாட்டார்—
பெண்கள்
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார்
துன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார்—குடி
துலங்குமினி யென்று சொல்லி. (ஆடு)

ஜாதி ஜனகட்டுகளை மதியாமல்—நித்தம்
தானடித்த மூப்பாக வாழ்ந்த தெல்லாம்—சுகம்
நீதி நெறி தெய்வ வழி நினைத்தினிமேல்—சுகம்
நிரம்பத் திரும்பு மென்று. (ஆடு)

ஆங்கிலம் கற்றோ மென்றகங்கரித்து—சொந்தம்
அக்கம் பக்கம் யாரெனினும் மதியாமல்
தாங்களே பெரிய ரென்றிருந்த தெல்லாம்—இனித்
தலைகுனிந்தோடு மென்று. (ஆடு

சர்க்கார் மனிதரென்று மதிமயங்கிக்—குணங்
தக்கா ரெனினும் அவமதித்தவர்கள்
சர்க்கார் ஜனங்களென்று மதிதெளிந்து—இனித்
தாழ உரைப்ப ரென்று. (ஆடு)

படித்தம் படித்தமென்று பட்டங் காட்டி—ஏழைப்
பாமரரை எய்த்து வாழ்ந் தவர்களெல்லாம்
நடித்த நாடகங்கள் தவறென்று கண்டு
நல்வழி நடப்ப ரென்று. (ஆடு)

அன்னியர்கள் நூல்கொடுத்து ஆடைகொடுத்து—நம்
அங்கத்தை மூடுகின்ற பங்க மொழியும்
கன்னியர்கள் நூற்க பல காளைகள் நெய்ய—இனிக்
காத்துக் கொள்வோம் மான மென்று. (ஆடு)

சாந்திபெறுவமென்று ஆடு ராட்டே—உப
சாந்தி விளங்கு மென்று ஆடு ராட்டே
காந்திநலங்கு மென்று ஆடு ராட்டே—இனிக்
கடவுள் அருளு மென்று: (ஆடு)

கதர் ஆனந்தக் களிப்பு.

பச்சை குத்தலியோ—என்ற மெட்டு.

கதர்வாங்கலியோ—நமது நாட்டுக்
கதர்வாங்கலியோ,

1 மாணவர்கள் வாங்குந்துணி
ஞானமுள்ளோர் போடுந்துணி
ஈனத்தைப் போக்குந்துணி
உன்னதமாய் வாங்குவீரே. (கதர்)

2 துன்பத்தை யகற்றுந்துணி
அன்பாகளை நெய்யுந்துணி
வம்பனை வதைக்குந்துணி
இன்பமதாய்க் கட்டிக்கொள்வீர் (கதர்)

3 சாத்திரத்தில் சொன்னதுணி
கோத்திரத்தில் கட்டுந்துணி

நேத்திரத்திற் கேற்றதுணி
பார்த்திபரே கட்டிக்கொள்ளும். (கதர்)

4 முன்னவர்கள் சொன்னதுணி
விண்ணவர்கள் போற்றுந்துணி
அன்னியரை ஓட்டுந்துணி
புண்ணியரே வாங்கிக்கொள்வீர். (கதர்)

5 வித்துவர்கள் வாங்குந்துணி
புத்துஉயிர் பெற்றதுணி
முத்துவொளி யானதுணி
சத்துள்ளோரே பெற்றுக்கொள்வீர். (கதர்)

6 மானத்தைக் காக்குந்துணி
ஞானத்தை யுண்டாக்குந்துணி
பாணத்தையே வெல்லுந்துணி
ஈனத்தைநீ ரகற்றிக்கொள்வீர், (கதர்)

7 தரித்திரத்தை நீக்குந்துணி
பருத்தி பஞ்சால் நெய்த துணி
குறித்தபணக்காரரெல்லாம்
துரத்திவிடும் வெள்ளைத்துணி. (கதர்)

8 அஞ்சிடாத வெள்ளைத்துணி
பஞ்சியினால் செய்ததுணி
நஞ்சான பேர்களெல்லாம்
நாசஞ்செய்யுங் கதர்துணி, (கதர்)

9 பாரதத்தில் சொன்னதுணி
பாரதமக்கள் கட்டும்துணி
தீராத கவலையெல்லாம்
தீர்த்துவைக்கும் வெள்ளைத்துணி. (கதர்)

10 சக்கரத்தில் செய்ததுணி
அக்கரைக்குச் செல்லுந்துணி
மக்களை வளர்க்குந்துணி
மடையர்களைத் திருத்துந்துணி. (கதர்)

11 பஞ்சபூதஞ் செய்ததுணி
வஞ்சனையைத் தீர்க்குந்துணி
பஞ்சமா பாதகரெல்லாம்
பாழாக்குங் கதர்துணி. (கதர்)

12 விழியாரக் கட்டுந்துணி
வழியான தறித்துணி
பழிகாரப் பாவிகளை
பாழாக்குங் கதர்துணி. (கதர்)

13 வேதாந்தத்தில் சொல்லுந்துணி
வேதியர்கள் கட்டுந்துணி
நீதியுள்ளோர் செய்யுந்துணி
பாதியிலே போனதுணி. (கதர்)

மதுவிலக்கு

ஆனந்தக் களிப்பு

[சங்கர சங்கர சம்போ மெட்டு.]

1. வந்தேமாதர மென்பாய்
 எங்கள் மாநிலத் தாயை
 வணங்குவோ மென்பாய். (வந்தே)

2. கள் சாராயம் காப்பி டீ குடிக்காதே
 உன் கஷ்டார்ஜிதசொத்தை
 வீணில் தொலைக்காதே. (வந்தே)

3. கள் சாராயத்திற் குணமுண்டோ
 ஐயோ இவைவிட மனிதர்சாக
 வேறு விஷமுண்டோ. (வந்தே)

4. குற்றத்திற் கேற்ற அபராதம்
 கோர்ட்டார் விதிப்பதில் காண
 லாம் பேதம் (வந்தே)

5. குடிவெறிக்கே கவர்ன்மெண்டார்
கோடான கோடி ரூபா அபராத
வரிதான் போட்டார். (வந்தே)

6. குடிக்க குழந்தைக்குக் கஞ்சியுமில்லை
உடுக்க உன் பெண்டிருக்கு
கந்தையுமில்லை. (வந்தே)

7. ஐயோ இது குடியால் வந்த விபத்தன்றோ
இன்னும் நீ குடியை நிறுத்தாம
லிருப்பது நன்றோ. (வந்தே)

8. அமெரிக்கர் குடிப்பதை முற்றிலும்
விட்டார் அதனாலளவற்ற ஐஸ்வர்யம்
பெற்றார். (வந்தே)

9. குடியர் விரதந்தனைக் கொள்ளு
திருவள்ளுவரும் சொன்னதே
சொல்லு. (வந்தே)

" மணிவாசகம்."

இப்பெயர் பூண்ட மாதசஞ்சிகை ஒவ்வொரு மாத முதலில் அனுப்பப்படும். இஃது தமிழ் மொழி வளர்ச்சிக்கு, ஏற்பத் தமிழ்ப் புலவர் பல்லோர் எழுதிய கட்டுரைகளையும்; சமயத்திறத்தினில், எம்மதமும் சம்மதமாகக் கூறுவதும்; கைத்தொழில், சோதிடம் வாணிபம், ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகள் முதலியதும்; நீதிமன்றக் குறிப்புக (கேஸ்லாக்கள்) ளும்; மகிழ்ச்சிக் கொத்துகளும் வெளிவரும் இம்மாதிரி சஞ்சிகை வெளிவருவது இதுவே முதல் தடவை.

வருட சந்தா	....	ரூ. 1—0—0.
வெளி நாடுகளுக்கு	...	ரூ. 1—8—0.

மாதிரி காபி இலவசமாக அனுப்பப்படும்.

அதிபர், " மணிவாசக நிலையம் ",

திருவள்ளூர், M. S. M.

வந்தே மாதரம்! அல்லாஹூ அக்பர்!!

காந்தி கேழ்க்கும்,

பிச்சை.

உலகப் பெரியோனென்று பல்லோராலும் கொண்டாடப்படும் காந்தி மகான், நமது நாட்டின் தரித்திரத்தைப் போக்கவும், அடிமைத்தனத்தை நீக்கவும், சுதந்தர மடையவும், நம்மைக்கேட்பது யாதெனில் "கதர் ஆடை அணிவதும்", "கைராட்டை" சுற்றுவதமே. மைசூர் மகாராஜ, திருவாங்கூர் மகாராணியார், ஸர் பிரபா சங்கரப்பட்டாணி, பெஸண்ட் அம்மையார் முதலிய பெரியவர்கள் தினம் ½-மணி காலம் நூல் நூற்கும் கால் நம்போல் சாமனியர்கள் நூற்க யாது தடை? கிருஸ்துவ பாதரிகள் மகமத்திய தலைவர்கள் ஹிந்துபிரமுகர்களும், கவர்மெண்ட்டின் பெரியஉத்தியோகஸ்தர்களும், மந்திரிகளும் கதர் கட்டுகையில் நாம் அதைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. ஆகையால் "கதர் கட்டுங்கள்" "கைராட்டினத்தைச்சுற்றுங்கள்".

வந்தே மாதரம்.

செங்கல்பட்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டி.

ஆனந்தா பிரிண்டிங் ஒர்க்ஸ், திருவள்ளூர்.

180479